DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 121/2020

List of Witness : Lw12

Prosecution Witness : PW9

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பி.சந்தாணம் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/11/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது இடையகோட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலர் 1975 ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.08.2018 ஆம் தேதி நான் இடையகோட்டை காவல் நிலையத்தில் காவலராக பணியில்இருந்தபோது சார்பு ஆய்வாளரின் உத்தரவின் பேரில் மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது வழக்கில் காயம்பட்ட முருகராஜ் என்பவர் உள்நோயாளியாக தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் அவர் மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த செல்வராஜ் மனைவி மகுடீஸ்வரி என்பவரிடம் விசாரணை செய்து அவர் அளித்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார் மனுவை எழுதி தயார் நிலையில் வைத்து இருந்தார்கள் என்றால் இல்லை. 26.08.2018 ஆம் தேதி தான் நான் வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திற்கு மருத்துவமனையில் இருந்து தகவல் வந்ததை பற்றி தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் தகவல் வந்தது என்றால் 23.08.2018 ஆம் தேதி மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தது. தகவல் வந்து மூன்று நாட்களுக்கு பிறகு சார்பு ஆய்வாளர் என்னை புகார் மனு வாங்க அனுப்பினார் என்றால் சரிதான். புகார் வாங்கும்போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் இரண்டு பேர் இருந்தார்கள். புகாரில் சாட்சி கையொப்பம் செய்து உள்ளார். மேற்படி இரண்டு நபர்கள் பெயர்கள் தெரியாது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். நான் எழுதிய புகாரில் கையொப்பம்

இட்டார்களா என்றால் படித்து பார்த்து கையொப்பம் இட்டார்கள். வழக்கிற்கு ஏற்றவாறு புகாரை நான் எழுதிக் கொண்டு புகார்தாரரிடம் இருந்து கையொப்பம் மட்டும் வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2025.11.20 17:10:17 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 20/11/2025